# யூன் – 10 – திங்கள்

**நான் ஆண்டவரைப்பற்றிப் பெருமையாகப் பேசுவேன்: திபா. 34:2**

---

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 1 : 1 – 7

கொரிந்து நகரில் உள்ள கடவுளின் திருச்சபைக்கும் அக்காயா மாநிலம் முழுவதிலும் வாழும் இறைமக்கள் அனைவருக்கும் கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து இயேசுவின் திருத்தூதனாயிருக்கும் பவுலும் சகோதரராகிய திமொத்தேயுவும் எழுதுவது. நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக! நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தந்தை இரக்கம் நிறைந்த கடவுள். அவரே ஆறுதல் அனைத்துக்கும் ஊற்று் அவரைப் போற்றுவோம்.கடவுள் எங்களுடைய இன்னல்கள் அனைத்திலும் எங்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். நாங்களே கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க எங்களால் முடிகிறது.கிறிஸ்து நமக்காக மிகுதியாகத் துன்புற்றார் அது போல அவர் வழியாக நாம் மிகுதியான ஆறுதலும் பெறுகிறோம்.ஆகவே நாங்கள் துன்புறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவும் மீட்புக்காகவும்தான் நாங்கள் ஆறுதல் பெறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவே. நாங்கள் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதைப்போல நீங்களும் உங்கள் துன்பங்களைத் தளராமனத்துடன் பொறுத்துக் கொள்வதற்கு இந்த ஆறுதல் ஆற்றல் அளிக்கிறது.நீங்கள் எங்கள் துன்பத்தில் பங்கெடுத்ததைப்போல் எங்களுடைய ஆறுதலிலும் பங்கு பெறுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் இவ்வாறு செய்வீர்கள் என உறுதியாக எதிர்நோக்கி இருக்கிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துனை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 1 - 12

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர்.அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை. ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என்பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே!மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்“ என்றார்.

**தியானம்:** தலை, கண், காது, கை, கால் கூட்டு உருவம் கொண்ட ஒரு உருவத்தினை நாம் மனிதன் என்று சொல்லுவோமா? மாறாக மனிதன் என்பவன் அவனை சூழவுள்ளவர்களுக்கும் பயன்படுபனவாகவும், அன்பு, பாசம், பண்பு, பற்று ஆகிய குணங்களுடையனவாகவும், இருப்பவையுமே மனிதன் என்று அழைப்போம். கொருந்தியர் மனம்மாறி, மனந்திருந்தி கடவுளின் வழியில் நடக்க வேண்டும் என்பதற்காக அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, பலவித நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டும் மனந் தளராமல் மக்களை மனம் மாறும்படி அழைப்பு விடுக்கும் பவுலடியார் இன்றைய வாசகத்தினூடாக எம்மிடம் கேட்பதை இவ்வாசகத்தை விசுவசிப்பதினூடாக உணர்கின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைமகன் இயேசு ஏழைகளே, பசியாயிருப்பவர்களே, அழுபவர்களே, தூய்மையுள்ளவர்களே, நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோரே பேறு பெற்றவர்கள் என்று கூறுகின்றார். உள்ளத்தில் ஏழ்மையுள்ளவர்களாகவும், எம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழ்பவர்களாகவும் நாம் பாவங்கள் என்பதை மனமார உணர்ந்து பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டவர்களாகவும், எனக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழ்பவரையே ஆண்டவர் பேறபெற்றவர் என்று கூறுகிறார். பணம் அதிகமிருந்தும் அடுக்குமாடி வீடுகளிருந்தும் மீண்டும் மீண்டும் வேண்டும் வேண்டும் என்ற அலைந்து திரியும் மனிதர்கள் நான் எனது என்ற சிந்தனையோடு மட்டும் நடமாடும் மனிதர்கள், ஆசை, காமம் என்ற தீய எண்ணங்கள் நடமாடும் மனிதர்கள் இவர்கள் மத்தியில் நாம் எவ்வகையைச் சேர்ந்தவர்கள்? சற்று சிந்திப்போம். எமது வாழ்க்கைப் பாதையை இறையரசை நோக்கி செல்லும் பாதையாக அமைக்க வரம் வேண்டுவோம்.